(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 62.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

**2010, திசெம்பர் 08, புதன்கிழமை, மு. ப. 9.30 மணிக்கு**

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0233/ '10

1.

கௌரவ சஜித் பிரேமதாஸ, — கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) அம்பாந்தோட்டை மாவட்டத்தில் வலஸ்முல்ல வலயக் கல்விக் காரியாலயத்திற்குரிய கட்டுவென கோட்டக் கல்விக் காரியாலயத்தினால் நிருவகிக்கப்படும் அரசாங்கப் பாடசாலைகளில் உட்கட்டமைப்பு வசதிகளுக்கும், பொதுவான தேவைகளுக்கும் பற்றாக்குறை நிலவுகிறதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) இப்பாடசாலை முறைமையில் மின்சார வசதியற்ற பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(ii) அப் பாடசாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்,

(iii) மேற்படி பாடசாலை முறைமையில் மின்சார வசதியற்ற ஆசிரியர் விடுதிகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(iv) அவற்றிற்குரிய பாடசாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்,

(v) மரத்தளபாடங்களுக்கான தேவை காணப்படும் பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(vi) அத்தேவைகள் யாவையென்பதையும்,

(vii) விஞ்ஞான கூடங்கள் மற்றும் நூலகங்கள் அற்ற பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(viii) அப் பாடசாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்,

அவர் இச்சபைக்குச் சமர்ப்பீரா?

(இ) (i) மேற்படி தேவைகளைப் பூர்த்திசெய்யத் தேவையான நிதியை அப்பாடசாலை களுக்கு ஒதுக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்,

(ii) அவ்வாறாயின் அது எவ்வளவு காலத்தினுள் நடைபெறுமென்பதையும்,

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0472/ '10

2.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பெற்றோலியக் கைத்தொழில்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு நாணயமாற்று வரம்பிடல் (Hedging) உடன்படிக்கையை அறிமுகப்படுவத்தியவர் யார் என்பதையும்,

(ii) அதன் நோக்கம் யாதென்பதையும்,

(iii) கேள்விப்பத்திரங்கள் ஏதும் கோரப்பட்டனவா என்பதையும்,

(iv) கேள்விப்பத்திர மனுதாரர்களின் பெயர்களையும்,

(v) இன்றேல், அதற்கான காரணத்தையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) நாணயமாற்று வரம்பிடல் நடவடிக்கைகள் தொடர்பில் இற்றைவரை ஏற்பட்டுள்ள மொத்தச் செலவையும்,

(ii) பொதுமக்களால் தொடரப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கையையும்,

(iii) அத்தகைய வழக்குகள் யாரால் எப்போது தெரடரப்பட்டன என்பதையும்,

(iv) அதன் பெறுபேறு என்னவென்பதையும்

அவர் அறிவிப்பாரா?

(இ) (i) ஏதேனும் வங்கிகளினால் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற் கெதிராக உள்ளக மத்தியஸ்த விசாரணைக்கான நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டதா என்பதையும்,

(ii) அவ்வாறாயின், எங்கே, எத்தொகைக்கு என்பதையும்,

(iii) சட்டரீதியான பிரதிவாதத்திற்கு இற்றைவரை ஏற்பட்டுள்ள மொத்தச் செலவையும்,

(iv) சட்டச் செயற்பாடுகளுக்கான செலவாக எவ்வளவு செலுத்தப்பட வேண்டியுள்ளது என்பதையும்,

(v) மேற்படி வழக்குகளால் ஏற்பட்ட எதிர்பாராத பொறுப்புகளின் பெறுமதியையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், என்?

0715/ '10

3.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மகநெகும இயந்திர உபகரணங்கள், நிர்மாணக் கம்பனியின் தவிசாளரை நியமித்த அதிகாரி யாரென்பதையும்,

(ii) குறித்த தவிசாளரின் வயது யாதென்பதையும்,

(iii) இவர் இதற்கு முன்னர் பணியாற்றிய இடம் மற்றும் பதவிகள் யாதென்பதையும்,

(iv) இவரின் தொழில் சார் அனுபவம் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0836/ '10

4.

கௌரவ விக்டர் அன்ரனி,— கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மஹிந்த சிந்தனை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மிகச் சிறப்பான நெல் கொள்வனவு முறையொன்று உருவாகியிருப்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) அவ்வாறு இருப்பினும், நாத்தண்டிய பிரதேசத்தில் நெல் கொள்வனவு வேலைத்திட்டமானது நெல் களஞ்சிய வசதிகளின்மையால் வெற்றியளிக்கவில்லை என்பதையும்,

(ii) அப்பிரதேசத்தில் உள்ள, நெல் களஞ்சியப்படுத்தலுக்கு மிகப் பொருத்தமான வடமேல் (புடவைக் கைத்தொழில்) கூட்டுறவு இயக்கத்திற்குச் சொந்தமான பாரிய கட்டிடம் ஒன்று எந்தப் பயன்பாட்டிற்கும் எடுக்கப்படாமல் பல வருடங்களாக மூடப்பட்டுள்ளதென்பதையும்

அவர் அறிவாரா?

(இ) மேற்படி கூட்டுறவு இயக்கத்தின் தலைவர்களுடன் கலந்துரையாடி, இந்தக் கட்டிடத்தை பிரதேசத்தின் விவசாயிகளது நெல்லை களஞ்சியப்படுத்துவதற்குப் பயன்படுத்துவதற்கும், அரசாங்கம் பொறுப்பேற்பதற்கும் நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0234/ ‘10

5.

கௌரவ சஜித் பிரேமதாஸ, — கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) அம்பாந்தோட்டை மாவட்டத்தில் வலஸ்முல்ல வலயக் கல்விக் காரியாலயத்திற் குரிய வலஸ்முல்ல கோட்டக் கல்விக் காரியாலயத்தினால் நிருவகிக்கப்படும் அரசாங்கப் பாடசாலைகளில் உட்கட்டமைப்பு வசதிகளுக்கும், பொதுவான தேவைகளுக்கும் பற்றாக்குறை நிலவுகிறதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) இப்பாடசாலை முறைமையில் மின்சார வசதியற்ற பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(ii) அப் பாடசாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்,

(iii) மேற்படி பாடசாலை முறைமையில் மின்சார வசதியற்ற ஆசிரியர் விடுதிகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(iv) அவற்றிற்குரிய பாடசாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்,

(v) மரத்தளபாடங்களுக்கான தேவை காணப்படும் பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(vi) அத்தேவைகள் யாவையென்பதையும்,

(vii) விஞ்ஞான கூடங்கள் மற்றும் நூலகங்கள் அற்ற பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(viii) அப் பாடசாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்,

அவர் இச்சபைக்குச் சமர்ப்பீரா?

(இ) (i) மேற்படி தேவைகளைப் பூர்த்திசெய்யத் தேவையான நிதியை அப்பாடசாலை களுக்கு ஒதுக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்,

(ii) அவ்வாறாயின் அது எவ்வளவு காலத்தினுள் நடைபெறுமென்பதையும்,

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல் ஏன்?

0577/ ‘10

6.

கௌரவ ரவி கருணாநாயக்க,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை சுகாதாரச் சேவைக்குத் தேவையான தாதியரின் எண்ணிக்கையையும்,

(ii) தற்போது சேவையிலுள்ள தாதியரின் எண்ணிக்கையையும்,

(iii) ஒரு தாதியின் சம்பளம் மற்றும் அவர்கள் பெறும் மேலதிக நன்மைகள் ஆகியவற்றையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) இலங்கையில் தாதியர் பயிற்சிப் பாடசாலைகள் தாபிக்கப்பட்டுள்ள இடங்களையும்,

(ii) ஓர் ஆண்டில் பயிற்றப்படும் தாதியரின் எண்ணிக்கையையும்,

(iii) ஒரு தாதியை பயிற்றுவிப்பதற்கு ஆண்டொன்றுக்கு ஆகும் செலவையும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(இ) அதிகரித்த தாதியர் தேவைகளுக்கேற்ப ஈடுபடுத்தக்கூடிய மேலதி தாதியர்களை பயிற்றுவிப்பதற்கான இயலாமை காணப்படுகின்தா என்பதையும் அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0718/ '10

7.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010 ஆம் ஆண்டின் ஏப்பிரல் மாதத்திலிருந்து இதுவரை இறக்குமதி செய்யப்பட்ட மொத்த கோழி இறைச்சியின் அளவு எவ்வளவென்பதையும்,

(ii) மேற்படி அளவு ஒவ்வொரு மாதத்திற்கும் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்,

(iii) மேற்படி கோழி இறைச்சி இறக்குமதி செய்யப்பட்ட நாடுகள் யாவை என்பதையும்,

(iv) ஒரு கிலோ கோழி இறைச்சி இறக்குமதிக்கு செலவிடப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதையும்,

(v) இறக்குமதி செய்யப்பட்ட கோழி இறைச்சியை சந்தைப்படுத்துவதற்காக வழங்கப்பட்ட நிறுவனங்களின் பெயர்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0837/ '10

8.

கௌரவ விக்டர் அன்ரனி,— நீர் வழங்கல், வடிகாலமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கற்பிட்டிப் பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்தில் செழிப்பற்ற மணல் மேட்டு நிலத்தில் இரசாயண உரம், கிருமி நாசினி வகைகள் பயன்படுத்தப்பட்டு மரக்கறி, பழ வகைகள் செய்கை பண்ணப்படுவதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி செழிப்பற்ற நிலத்திற்கு இடப்படும் யூரியா உள்ளிட்ட உரவகைகளில் உள்ள நைட்ரேட், நைட்ரையிட் போன்ற நச்சு இரசாயணப் பதார்த்தங்கள் அப்பிரதேச நிலத்துக்கடியிலான நீருடன் கலந்து அந்த நீர் கடுமையாக அசுத்தமடைந்துள்ளதென்பதையும்,

(ii) மருத்துவ நிபுணர்களின் கருத்திற்கேற்ப அந்த அசுத்த நீரைப் பயன்படுத்தும் மக்கள் நோய்க்குள்ளாகின்றனர் என்பதையும்,

(iii) ஆதலால், கற்பிட்டி பிரதேச மக்களுக்கு சுத்தமான குடிநீரை வழங்குவதற்கு விஷேட வேலைத்திட்டமொன்றை விரைவாக வகுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) ஆமெனின், அவ்வாறான வேலைத்திட்டமொன்றை விரைவாக வகுப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

1.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அலுவல்கள்,— ஒழுங்குப் பத்திரத்தில் காணப்படும் பொது அலுவல்களில் 2ஆம் இலக்க பிரேரணை மீதான நடவடிக்கைகள் இன்றைய அமர்வில் 23 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளிலிருந்து விலக்குப்பெறுமாக.

2.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு,— 7 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினாலும் 2010.07.09 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையினாலும் தடைபெறாமல் இன்றைய தினம் சபை அமர்வு நேரம் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 7.30 மணிவரை இருக்குமாக. பி.ப. 7.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*அ1.

ஒதுக்கீட்டுச் சட்டமூலம் (2011) — (ஒதுக்கப்பட்ட பதினான்காம் நாள்) — குழு ஆய்நிலை (பரிசீலனை, திசெம்பர் 07)

* 2.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் பிரேரணை,— 1959 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்கச் சட்டத்தினாலும், தேசிய அரசுப் பேரவையின் 1978 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்கச் சட்டத்தினாலும், 1988 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் திருத்தம் செய்யப்பட்ட (40 ஆம் அத்தியாயமான) பொது மக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதியவர்களால் மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் II ஆம் பாகத்தின் ஏற்பாடுகள் 2010, நவெம்பர் மாதம் 29 ஆம் திகதியிலிருந்து இலங்கையெங்கனும் நடைமுறைப்படுத்திக்கொண்டு செய்யப்பட்ட பிரகடனம் அங்கீகரிக்கப்படுமாக.

*3.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— நில அளவைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்,— 2002 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க நில அளவைச் சட்டத்தின் 41 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 65 ஆம் பிரிவின் கீழ், காணி அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்டு 2005 நவம்பர் மாதம் 23ஆம் திகதிய 1420/20 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட “நில அளவைச் சபை—2005 (வருடாந்த தொழில் புரியும் உத்தரவுப்பத்திரங்கள்)” பிரமாணங்களின் 3 ஆம் பந்தியை திருத்துவதற்காக 2009, திசெம்பர் மாதம் 18 ஆம் திகதிய 1633 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2010.10.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

*4.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— நில அளவைச் சட்டத்தின் கீழான அறிவித்தல்,— 2002 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, நில அளவைச் சட்டத்தின் 39ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 65ஆம் பிரிவின் கீழ், காணி, காணி அபிவிருத்தி, குடியிருப்பு மற்றும் போர் வீரர் நலனோம்புகை அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டு 2005, நவெம்பர் மாதம் 23 ஆம் திகதிய 1420/20 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட “2005 நில அளவைச் சபை (பதிவு) பிரமாணத்தின்” 2(2) ஆம் பந்தியை திருத்துவதற்காக 2010, ஏப்பிரல் மாதம் 12 ஆம் திகதிய 1649/3 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும், 2010.11.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

*5.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம்,— 2008 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8ஆம் பிரிவினால், நிதி, திட்டமிடல் அமைச்சருக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன், பதில் நிதி, திட்டமிடல் அமைச்சரால் செய்யப்பட்ட கட்டளை இல.27 இல் குறித்துரைக்கப்பட்ட கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

## 2008 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 27

2008 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் பதில் நிதி, திட்டமிடல் அமைச்சர் சரத் அமுனுகம ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக்கட்டளை மூலம் அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 21302 ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "அச்சிடல், பிரசாரம் மற்றும் புத்தகங்கள் விற்பனை முற்பணக் கணக்கு - கல்வி வெளியீட்டுத் திணைக்களம்” என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்:-

(i) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை — *மீளாய்வு செய்யப்படவில்லை.*

(ii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் ஆகக் குறைந்த எல்லை — ரூபா 2,400,000,000 இலிருந்து ரூபா 2,162,000,000 வரை.

(iii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட பற்று மீதியின் உச்ச எல்லை — *மீளாய்வு செய்யப்படவில்லை.*

(iv) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை — ரூபா 100,000,000 இலிருந்து ரூபா 960,000,000 வரை.

(இக்கட்டளை 2009.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம் : கலாநிதி சரத் அமுனுகம*
பதில் நிதி, திட்டமிடல் அமைச்சர்.

கொழும்பு 01,
2010.07.03

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

*6.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள், — 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 60 ஆம் 62 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணி, காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 ஓகத்து மாதம் 24 ஆந் திகதிய 1616/23 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*7.

வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*8.

காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்தல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*9.

உள்ளூர் அதிகாரசபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*10.

உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*11.

தீங்கு விளைவிக்கும் ஆயுதங்கள் (திருத்தம்) சட்ட மூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*12.

மத்தியஸ்த்த சபைகள் (திருத்தம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

13.

பின ஒழுங்கமைப்பு (கூட்டிணைத்தல்) சட்ட மூலம் — இரண்டாம் மதிப்பீடு.

14.

இலங்கை செமட்ட செத மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

15.

மகேஸ்வரி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

## தினப்பணிகள் மீதான திருத்தங்கள் பற்றிய முன்னறிவித்தல்

அ1.

ஒதுக்கீட்டுச் சட்டமூலம் (2011) என்னும் சட்டமூலத்திற்குக் குழு ஆய்நிலையில் சமர்ப்பிக்கப்படவிருக்கும் திருத்தங்களளைத் "தினப்பணிக்கான அனுபந்தம்" என்னும் தனியிதழிற் காண்க.